# 18

# "அதிகாரம் உள்ளவராய்"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #6*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*

I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*

J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளி யைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*

L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*

M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

## அறிமுகம்

இந்தப் பாடமானது இயேசுவின் முதல் கலிலேயப் பயணத்தையும், அத்துடன் அந்தப் பயணத்திற்கு முன்னும் பின்னும் கப்பர்நகூமில் நடந்த சில நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கிறது. இந்தப் பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள், "மாபெரும் கலிலேய ஊழியத்தில்," "மாபெரும்" என்ற வார்த்தையை இட உதவுகின்றன.

"அதிகாரம்" என்பது நமது வேத பாட வசனங்களில் திறவுகோலாக உள்ளது. இயேசு கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் பேசியபோது, "அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற். 1:22). அங்கிருந்தவர்களை இயேசு தமது போதனையினால் மட்டுமின்றி, தமது செயல்களினாலும் திகைக்கச் செய்தார். அவர் ஒரு அசுத்த ஆவியைத் துரத்தியபோது, "எல்லாரும் ஆச்சரியப்பட்டு: 'இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமை

யோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே' என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்'' (லூக். 4:36).

அதிகாரத்துவம் பற்றிய குறிப்பிடத்தக்க இந்தச் செயல்விளக்கங்கள், இயேசுவை யூத மார்க்கத்தலைவர்களுடன் ஒரு மோதலைச் சந்திக்க வைத்தன. இந்தப் பாடத்தில நாம், கிறிஸ்து தம்மை விமர்சித்தவர்களுடன் முகம்முகமாக எதிர்த்து நின்றதைக் காண்கின்றோம். ஒரு திமிர்வாதக் காரரைக் குணமாக்க ஆயத்தமாகுகையில், "பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு [தம்மைப் பற்றியே இவ்வாறு கூறிக் கொண்டார்] அதிகாரம் (authority)[1] உண்டு" (மத். 9:6) என்ற துணிச்சலான உரிமை கோருதலை ஏற்படுத்தினார். அந்தத் திமிர்வாதக்காரர் நடந்தபோது, மக்கள் கூட்டமானது, "ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (மத். 9:8).

## "அதிகாரம் உள்ளவராய்" கப்பர்நகூமில் (மத். 8:14-17; மாற். 1:21-34; லூக். 4:31-41)

**அதிகாரத்துடன் போதித்தல் (மாற். 1:21, 22; லூக். 4:31, 32)**

இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தைத் தொடங்கிய வேளையில், அங்கு ஏறக்குறைய ஒவ்வொரு சிறு நகரத்திலும் அமையப் பெற்றிருந்த ஜெப ஆலயங்களில் ஆயத்தமாயிருந்த மக்கள் கூட்டத்தை அவர் கண்டார் (லூக். 4:15ஐக் காணவும்). ஜெப ஆலயங்களில் வேத வசனங்கள் வாசிக்கப் பட்ட பின்பு, ஆராதனைக்குப் பொறுப்பாளர்[2] அங்கிருந்த எவரையாவது (தகுதியுள்ளவரென்று வரையறுக்கப்பட்ட எவரையாவது), வாசிக்கப்பட்ட வசனப்பகுதிக்கு விளக்கவுரை கொடுக்கும்படி அழைக்கக்கூடும்.

இயேசு நான்கு மீனவர்களை அழைத்த பின்பு வந்த [முதல்] ஓய்வு நாளன்று, அவரும் அவரோடு சீஷர்களும் கப்பர்நகூமில்[3] இருந்த ஜெப ஆலயத்தில் ஆராதனையில் கலந்துகொள்ளச் சென்றார்கள். கிறிஸ்து ஏற்புடைய வேளையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார். அவரது உரையைக் கேட்டவர்கள், "அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற். 1:22; லூக். 4:32யும் காணவும்). வேதபாரகர்கள் தங்கள் சுய அதிகாரத்தில் பேசவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் [தாங்கள் உரைக்கும்] பாடக்கருத்தைப் பேசியிருந்தவரின் முடிவற்ற அதிகாரங்களை மேற்கோள் காண்பித்தார்கள். The Living Bible என்ற வேதாகமப் பொழிப்புரையானது, ''சபையார் திகைப்படைந்தார்கள் ... ஏனென்றால் அவர் அதிகாரத்துவமுடையவராகப் போதித்தார், மற்றும் அவர் - அங்கிருந்தவர்கள் வழக்கமாகக் கேட்டுப் பழக்கப்பட்டது போலின்றி - தமது கருத்துக்களை நிரூபிப்பதற்குப் பிறருடைய கூற்றுக்களை மேற்கோள் காண்பிக்கவில்லை.''[4]

***அதிகாரத்துடன் புத்திகூறுதல் (மாற். 1:23-28; லூக். 4:33-37)***

*ஜெப ஆலய ஆராதனைகள் ஒரு அடிப்படையான நல்லொழுக்கத்தின் பண்புகொண்டிருந்தன, ஆனால் இயேசு பேசுகையில், அந்த அமைதியானது ஒரு கூக்குரலினால் கலைக்கப்பட்டது:*

> *அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன்: "ஐயோ! நசரேயனாகிய[5] இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்"[6] என்று சத்தமிட்டான் (மாற். 1:23, 24).*

*அந்த "அசுத்த ஆவி"* ("unclean spirit") *ஒரு* (demon) *பிசாசாக இருந்தது என்று லூக்கா நமக்குக் கூறுகின்றார் (4:33, 35).* "Demon" *என்பது daimonion*[7] *என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. அசுத்த ஆவிகள், இயற்கைக்கு மேலான தீய ஜீவிகளாக உள்ளன - இவைகள் சாத்தானின் கீழ் செயல்படுபவைகளாக,*[8] *அவனது சித்தத்தை நிறைவேற்றத் தங்களை ஒப்புக்கொடுத்தவைகளாக உள்ளன. புதிய ஏற்பாட்டின் காலத்தில், அசுத்த ஆவிகள், தனிநபர்களை அவர்களின் மனவிருப்பத்திற்கு எதிராகப் பிடித்துக் கொண்டிருக்க முடிந்தது. உடல்ரீதியான சுகவீனம், மூடநம்பிக்கையுள்ள மக்களால் அசுத்த ஆவி பிடித்திருந்ததாக நினைக்கப்பட்டதென்று கூறி விடுதலையியல் கல்வியாளர்கள், கிறிஸ்துவின் நாட்களில் அசுத்த ஆவிபிடித்தல் இருந்தது என்பதை மறுக்கின்றார்கள். ஆயினும், மருத்து வரான லூக்கா அவர்கள், உடல்ரீதியான சுகவீனம் கொண்டிருந்தவர்களுக் கும் "அசுத்த ஆவியினால் துன்புற்றவர்கள்" அல்லது பிசாசு பிடித்திருந்த வர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினார்.*[9] *அசுத்த ஆவி பிடித்தலின் கோட்பாடு, இயேசுவுக்கு அவரது அதிகாரத்தைச் செயல் விளக்கப்படுத்தவும் தமது பரிவிரக்கத்தைக் காண்பிக்கவும் கூடுதலான வாய்ப்பைக் கொடுத்தது. மாற்கு 1 மற்றும் லூக்கா 4 ஆகிய அதிகாரங்கள், இயேசு அசுத்த ஆவியைத் துரத்தியது பற்றி பதிவு செய்யப்பட்ட முதல் விவரங்களைத் தருகின்றன.*

*கிறிஸ்துவை பிசாசு இடைமறித்தபோது, அவர் அந்த அசுத்த ஆவியைக் கடிந்துகொண்டார். அந்த பிசாசு கோபம் கொண்டு, தான் பிடித்திருந்த நபரைத் தரையில் தள்ளிற்று, அவரது உடலை வலிப்புகளால் திருகிற்று, மற்றும் அந்த நபரைக் கூக்குரலிடச் செய்தது. ஆயினும் கடைசியாக அந்த ஆவியானது "அவனுக்கு ஒரு சேதமுஞ்செய்யாமல், அவனை விட்டுப் போய்விட்டது" (லூக். 4:35).* The Living Bible *என்ற வேதாகமத்தின் பொழிப்புரையில் "அவனை மேலும் துன்புறுத்தாமல்" என்றுள்ளது.*

*அங்கிருந்தவர்கள் திகைப்படைந்தார்கள், மற்றும் "அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று" (மாற். 1:28).*[10]

***அதிகாரத்துடன் குணமாக்குதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41)***

*ஜெப ஆலய ஆராதனைக்குப் பின்பு, இயேசுவும் அவரது நான்கு சீஷர்*

*களும் பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குச் சென்றார்கள் (மாற். 1:29).*[11] *அங்கு பேதுருவின் மாமி*[12] *கடுமையான காய்ச்சலினால் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்ததை அவர்கள் கண்டார்கள். இயேசு அந்தப் பெண்மணியைக் கைப்பிடித்து, மேலே தூக்கிவிட்டார். "உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்" (லூக். 4:39).* The Living Bible *என்ற வேதாகமத்தின் பொழிப்புரையானது, "அவள் எழுந்து அவர்களுக்கு உணவைத் தயாரித்தாள்" என்று கூறுகிறது!*

*இந்த வேளையில், ஜெப ஆலயத்தில் நடந்தது பற்றி வார்த்தை பரவி யிருந்தது. இவ்விதமாக சூரியன் மறைந்த பின்பு,*[13] *"ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களை சொஸ்தமாக்கினார்" (லூக். 4:40). அசுத்த ஆவிகளையும் இயேசு துரத்தினார். "பிசாசுகளும்: 'நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்று சத்தமிட்டு அநேகரை விட்டுப் புறப்பட்டது; அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்" (லூக். 4:41; மேலும் 4:34; மாற். 1:24 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*கிறிஸ்து யார் என்பதைப் பிசாசுகள் எப்படியோ அறிந்திருந்தன (யாக். 2:19ஐக் காணவும்). ஜெப ஆலயத்தில் பிசாசு இயேசுவை "தேவனுடைய பரிசுத்தர்" என்று குறிப்பிட்டிருந்தது. இந்த பிசாசுகள் அவரை "தேவனு டைய குமாரன்" என்று அழைத்தன. குளிருக்கு அணியும் ஆடை ஒன்றில் நான் சமீபத்தில் பின்வரும் வார்த்தைகளைக் கண்டேன்: "பிசாசுகள் ஐந்திற்கு ஐந்து[ம்] பின்வருவதை ஒப்புக்கொள்ளுகின்றன: இயேசு தேவனு டைய குமாரனாக இருக்கின்றார்!" பிசாசுகள் இயேசுவின் தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளுகையில், பல மனிதர்கள் அவ்வாறு செய்ய மறுத்தல் என்பது கவலைக்குரியதாக உள்ளது.*

*இயேசு, தாம் யார் என்பதைக் கூறுவதற்கு அந்த அசுத்த ஆவிகளை அனுமதிக்காதிருந்தது ஏன்? இதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம்,*[14] *ஆனால் ஒருவேளை, அவர் தாம் எந்த வழியிலும் பிசாசுகளுடன் உடன்பாடு கொண்டிருந்ததாகத் தோன்றுவதை விரும்பவில்லை என்பது வலிவார்ந்த காரணமாக இருந்திருக்கலாம். கடைசியில், அவர் பெயல்செபூலின்*[15] *அதாவது பிசாசின் வல்லமையைக் கொண்டே பிசாசுகளைத் துரத்தியதாகக் குற்றம் சாட்டப்படுவார் (மத். 12:24).*

## *"அதிகாரம் உள்ளவராய்" கலிலேயாவில் (மத். 4:23-25; 8:2-4; மாற். 1:35-45; லூக். 4:42-44; 5:12-16)*

### அதிகாரமும் கண்ணோக்கும்

*அடுத்த நாளில் அதிகாலையில், இயேசு ஜெபிப்பதற்காக கப்பர் நகூமுக்கு வெளியே தனிமையான ஒரு இடத்திற்குச் சென்றார் (மாற். 1:35).*

அவர் தெய்வீகத்துவம் வாய்ந்தவராக இருந்தாலும், அவர் தம் தந்தையுடன் தனித்திருப்பது அவசியமாயிருந்தது. உங்களுக்கும் எனக்கும்கூட இதே விஷயம் அவசியமானதாக உள்ளது.

அவரது சீஷர்கள் அவரைத் தேடிச் சென்று, "உம்மை எல்லாரும் தேடுகின்றார்கள்" (மாற். 1:37) என்று கூறினார்கள். கப்பர்நகூமில் இயேசு இவ்வளவு வெற்றிகொண்டதைப் பற்றி அவர்கள் உணர்வெழுச்சி அடைந்திருந்தார்கள் - ஆனால் இயேசுவின் கண்ணோக்கானது ஒரு நகரத்தை விட பெரியதாக இருந்தது. அவர் கலிலேயாவில் இருந்த ஒவ்வொரு ஊரிலும் பிரசங்கிப்பதற்கான தமது திட்டத்தை வரையறுத்தார் (மாற். 1:38). இந்த வேளையில், கப்பர்நகூமில் இருந்த ஒரு கும்பல் அவரைக் கண்டது. அவர்கள் அவரை [அங்கேயே] தங்கும்படி கேட்டுக் கொண்டார்கள், ஆனால் அவர் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தார் (லூக். 4:42, 43). அவரும் அவரது சீஷர்களும் கலிலேயாவில் தங்கள் முதல் பயணத்தில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கலிலேயா மாகாணம் அதன் நீளம் மற்றும் அகலம் ஆகியவற்றில் சுமார் அறுபத்து மூன்று மைல்களுக்கு முப்பத்து மூன்று மைல்கள் இருந்தது. இதில் பல நூறு ஊர்கள் இருந்தன. அந்தப் பயணத்திற்குப் பல மாதங்கள் ஆகியிருக்கும். இந்தப் பயணத்தின் வெற்றி பற்றி மத்தேயுவின் சுருக்கமான அறிக்கை கீழே தரப்படுகிறது:

> பின்பு, இயேசு கலிலேயா[16] எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.
>
> அவருடைய கீர்த்தி சீரியா[17] எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந் திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும்[18] சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின் சென்றார்கள் (மத். 4:23-25).

### அதிகாரத்துவமும் பரிவிரக்கமும்

அந்தப் பிரசங்கப் பயணத்தில் நடைபெற்ற ஒரு அற்புதம் விவரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது: தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்கியது. பழங்காலத்தில் தொழுநோய் என்பது மிகவும் பயங்கரத்திற்குரிய நோயாக இராவிட்டாலும் பயங்கரத்திற்குரிய நோய்களில் ஒன்றாகவே கருதப் பட்டது. இந்தச் சொற்றொடரானது இன்றைய நாட்களில் நாம் தொழுநோய் என்று அழைக்கும் நோயுடன் கூடுதலாக, தோல் மற்றும் நரம்புகளைப் பாதிக்கும் பல்வகைப்பட்ட வியாதிகளையும் குறித்தது.[19] அந்த நோய் தொற்றக்கூடியதாகவும் பொதுவாகக் குணப்படுத்த முடியாதது என்று கருதப்பட்டதாகவும் இருந்தது.[20] தொழுநோயாளிகள் தங்களைத்

தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மக்களின் எஞ்சிய கூட்டத்தவருடன் தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என்றும் விதிக்கப் பட்டிருந்தது (லேவி. 13:45, 46).

இயேசு பயணம் செய்கையில், அவரிடத்தில் ஒரு தொழுநோயாளி வந்தார். அந்த மனிதர் "குஷ்டரோகம் நிறைந்த"[21]வராக இருந்ததாக லூக்கா கவனித்தார் (லூக். 5:12). அவர் [தொழுநோயாளி] அந்த நோயின் தீவிரமான தாக்குதலின் கீழ் இருந்தார்: அவரது தோல் ஏற்கனவே கீழே விழுந்துவிடும் நிலையில் இருந்தது; அவர் தமது உடலின் நுனிப்பாகங்கள் சிலவற்றை - விரல்கள், கால்விரல்கள், அவரது மூக்கின் நுனிப்பகுதி, அவரது காதுகளின் மேல்பகுதி ஆகியவற்றை - இழந்து இருக்கலாம். அந்தத் தொழுநோயாளி கிறிஸ்துவுக்கு முன்பாக மண்டியிட்டு, அவரிடத்தில் "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்று கெஞ்சத் தொடங்கினார் (மாற். 1:40). "இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: 'எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு' என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்" (வ. 41, 42).

இயேசு "நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவ"ராகப் பிறந்தார் (கலா. 4:5) என்று நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்; அவர் மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடித்து, அதையே செய்யும்படி மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார். குணமான தொழுநோயாளிகள் சடங்காச்சாரமான சுத்திகரித்தல்களுக்காகவும் ஆசாரியர்கள் அவர்களைப் பரிசோதிப்பதற்காக வும் எருசலேமில் இருந்த தேவாலயத்திற்குப் பயணிக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கேட்டுக் கொண்டது (லேவி. 14:2-32). இவ்விதமாக இயேசு அந்த மனிதரிடத்தில், "ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டிருக்கிறவை களை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து" என்று கட்டளையிட்டார் (மாற். 1:44ஆ).

கிறிஸ்து, "'நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு' என்றும் உறுதியாகக் கட்டளையிட்டார்" (வ. 43, 44ஆ). ஆகிலும், உணர்வெழுச்சியடைந்த அம்மனிதர் "புறப்பட்டுப்போய், இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்" (வ. 45அ).

நான் இளைஞனாக இருந்தபோது, [இந்த நிகழ்வில்] இயேசு எதிர்ப்புற மனோதத்துவத்தைப் பயன்படுத்தினார் என்று நினைத்தேன். நான், "எவ்வளவு புத்திசாலித்தனம்! இயேசு அந்த மனிதரிடத்தில் அதை யாருக்கும் கூறவேண்டாம் என்று கட்டளையிட்டார், அது அம்மனிதர் இன்னும் அதிகமானவர்களிடம் கூறும்படி விரும்பச் செய்தது!" இப்படிப்பட்ட விஷயமானது இயேசுவின் இயல்புக்கு முரண்பாடானது என்பதை நான் இப்போது புரிந்துகொள்ளுகின்றேன்; அவர் மக்களைத் தம் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சாயமாட்டார். கிறிஸ்து அந்தக் கட்டளையை அம்மனிதருக்குக் கொடுத்த விஷயத்தில் மிகவும் தீவிரமாக இருந்தார் என்றும் நான் புரிந்துகொண்டுள்ளேன். அவர் கலிலேயாவின் பிற நகரங்களிலும் ஊர்களிலும் பிரசங்கிப்பது அவசியம் என்று தம் சீஷர்

*களிடத்தில் கூறியிருந்தார் (மாற். 1:38; லூக். 4:43) - ஆனால், குணமாக்கப் பட்ட தொழுநோயாளியின் விளம்பரத்தினால், "இயேசு வெளியரங்க மாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கக்கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்" (மாற். 1:45ஆ).*

*அவர் சென்ற இடங்களில் எல்லாம், மக்கள் அவரைத் தேடினார்கள் மற்றும், "எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்" (வ. 45இ). முதல் பயணமானது தகுதியற்ற வெற்றியாய் இருந்தது.*

## *"அதிகாரம் உள்ளவராய்"*
## *மீண்டும் கப்பர்நகூமில்*
## *(மத். 9:2-9; மாற். 2:1-14; லூக். 5:17-28)*

***பாவத்தை மன்னிப்பதற்கான அதிகாரம்***

*இந்தப் பயணத்தின் முடிவில் இயேசு கப்பர்நகூமுக்கு - அநேகமாகப் பேதுருவின் வீட்டிற்கு - களைப்பு நீங்கிப் புத்துணர்வு பெறுவதற்காக வந்தார். ஆயினும் அவர் அதிகமாக ஓய்வெடுக்கவில்லை, ஏனெனில் அவர் அந்த ஊருக்குத் திரும்பி வந்திருந்தது பற்றிய செய்தியானது விரைவில் பரவிற்று. அவர் தங்கியிருந்த வீட்டில் விரைவிலேயே மக்கள் கூட்டம் நிறையத் தொடங்கிற்று.*

*அங்கு இருந்தவர்களுடன் பரிசேயர்களும் வேதபாரகர்களும் இருந்தார்கள் (மத். 9:3; மாற். 2:6; லூக். 5:17, 21). இந்த மனிதர்கள் நியாயப் பிரமாணத்திற்குக் காவலர்கள் என்று தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டவர்களாகவும் பாரம்பரியங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருந்தார்கள்.*

*இவர்களில் சிலர் எருசலேம் போன்ற தொலைவில் இருந்த இடங்களில் இருந்தும்கூட வந்திருந்தார்கள் (லூக். 5:17). யோவான் ஸ்நானனின் பிரபலத் தன்மை வளர்ந்தபோது ஆசாரியர்களும் லேவியர்களும் அவரிடத்தில் கேள்வி கேட்பதற்காக எருசலேமிலிருந்து [யோவான் இருக்குமிடத்திற்கு] வந்திருந்தார்கள் (யோவா. 1:19). இப்போது வேதபாரகர்களும் பரிசேயர் களும் இயேசுவைப் பரிசோதிப்பதற்காக வந்திருந்தார்கள்.*

*இயேசு பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில், நான்கு மனிதர்கள் அந்த வீட்டின் கூரையைப் பிரித்து, திமிர்வாதம் கொண்டிருந்த ஒரு நண்பரை அவ்வழியே இறக்கிவிட்டார்கள். இயேசு அந்த மனிதர்மீது பரிவு கொண்டவராக, "மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன" (மாற். 2:5) என்று கூறினார்.*

*கிறிஸ்துவின் விமர்சகர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்கள், "இவன் இப்படித் தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்?" (வ. 7) என்று சிந்தித்தார்கள். "தேவதூஷணம்" என்ற வார்த்தை "எதிராகப் பேசுதல்" என்று அர்த்தப் படுகிறது. இது அவதூறு பேசுதலைப் பற்றிக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. (இதே கிரேக்க வார்த்தை தீத்து 3:2 மற்றும் 2 பேது.*

*2:2 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.) தேவனுடைய இயல்பு அல்லது பண்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் எந்த ஒரு மொழிநடையையும் குறிப்பதற்கு இந்த வார்த்தையை யூதர்கள் பயன்படுத்தினார்கள். வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரின் தர்க்கம் பின்வருமாறு சென்றது:*

1. *தேவன் ஒருவர் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும்.*
2. *இந்த மனிதன் தேவனல்ல.*
3. *ஆகையால் இவர் தேவதூஷணக் குற்றமுடையவராக இருக்கின்றார்.*

*அவர்களின் தர்க்கத்தைப் பொறுத்தமட்டில் எந்தத் தவறும் இருக்கவில்லை; [ஆனால்] அவர்களின் இரண்டாவது கருத்து சரியற்றதாயிருந்தது என்பதே இங்கு பிரச்சனையாக உள்ளது.*

> *அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: "நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று' சொல்வதோ, 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று' சொல்லுவதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (வ. 8-11).*

*இதை எளிமையாக எடுத்துரைப்பதென்றால், இயேசு தாம் பாவங்கள் மீது[ம்] அதிகாரம் கொண்டிருந்தார் என்பதை நிரூபிப்பதற்காக, நோயின் மீது தமது அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.*

*அந்தத் திமிர்வாதக்காரனை எழுந்திருக்கும்படி இயேசு கூறியபோது, "உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: 'நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை' என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (வ. 12).*

*எருசலேமிலிருந்து வந்த பார்வையாளர்களின் தர்க்கமானது பின்வருமாறு சென்றிருக்க வேண்டும்:*

1. *தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்க முடியும்.*
2. *இந்த மனிதர் பாவங்களை மன்னிக்க முடிகிறது.*
3. *ஆகையால் இவர் தேவனாக இருக்கின்றார்!*

*துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் தப்பெண்ணம், பொறாமை, மற்றும் இயேசுவின் உரிமைகோருதல்களை கவனிக்கக் கூடாத அளவுக்கு சுய ஆர்வம் ஆகியவற்றினால் மிகவும் நிறைந்திருந்தார்கள்.*

இதுவே இயேசு தாம் சிலுவையில் அறையப்படும் வரையிலும் எதிர்கொள்ள வேண்டியதாயிருந்த பகைமை உணர்வின் தொடக்கமாக இருந்தது. விரைவிலேயே அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் ஒற்றர்கள் பின்தொடர்ந்து, அவரை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய சரியற்ற தன்மைகள் சிலவற்றைக் கண்டறிய முயற்சி செய்வார்கள்.

**மனிதர்களிடத்தில் அறைகூவல் விடுவதற்கான அதிகாரம்**

இயேசு தமது விமர்சகர்கள் மகிழ்ச்சியற்றுப் போகும்படிக்குப் பல செயல்களைச் செய்திருந்தார்: அவர் சுத்தமற்ற ஒரு தொழுநோயாளியைத் தொட்டிருந்தார். அவர் தம்மால் பாவங்களை மன்னிக்க முடியும் என்று சுட்டிக்காண்பித்திருந்தார். நமது பாடத்திலுள்ள இன்னும் ஒரு நிழ்ச்சி யானது அவர்களின் கோபத்தைக் கிளறி விட்டது: அவர், ஆயக்காரர் ஒருவரைத் தமது சீஷர்களில் ஒருவராயிருக்கும்படி அழைத்தார்.

கப்பர்நகூமின் வெளிக்காட்சியமைவில் கிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமாயிருந்தது கடற்கரையாகும். அங்கு அவர் மீண்டும் சென்றபோது, மக்கள் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது, அவர்களுக்கு அவர் போதித்தார் (மாற். 2:13).

அருகாமையில் ஆயக்காரர் ஒருவரின் வரிவசூல் செய்யும் அலுவலகம் ஒன்று இருந்தது.[22] அந்த அலுவலகமானது பொருட்கள் மீதான வரிகளை வசூலிப்பதற்காகக் கடலின் அருகில் இருந்திருக்கலாம், மக்கள் கடலினூடே படகுகளில் சென்றார்கள் அல்லது அது கப்பர்நகூமுக்குள் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு வரிவசூலிப்பதற்காகச் சாலையின் அருகாமையில் இருந்திருக்கலாம்.[23] மத்தேயு என்பது அந்த ஆயக்காரரின் பெயராகும் (மத். 9:9). அவர் அல்பேயு என்பவரின் மகனாவார் மற்றும் அவர் லேவி என்றும் அறியப்பட்டார் (மாற். 2:14).

ஆயக்காரர்கள் யூதர்களால் பொதுவாக வெறுக்கப்பட்டார்கள். ரோமர்களுடன் ஒத்துழைக்கும் சக யூதர் ஒருவர் காட்டிக் கொடுப்பவ ரென்று கருதப்பட்டார். இராபர்ட் எல். தாமஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> மத்தேயு போன்ற ஆயக்காரர்கள் ... வர்த்தகர்களின் போக்குவரத்தில் இருக்கும் பொருட்களின் விலையை மதிப்பிட்டு அவற்றின் மீதான வரியை ரோம அரசிற்காக வசூலித்தார்கள் ... தெளிவற்ற வரிவிகிதங் கள் ஆயக்காரர்கள் தங்கள் சொந்த இலாபத்தை அதிகரிக்குமளவுக்கு அதிகமான வரியை விதிக்க அனுமதித்தன. மத்தேயு தமது தொழிலிருந்த பெரும்பான்மையான நேர்மையற்ற மற்றவர்கள் போலச் செயல்பட்டாரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவர் சகயூதர்களால் விலக்கி வைக்கப்பட்டு அதன் மூலம் புறக்கணிக்கப்பட ஏதுவான ஒரு வகுப்பாராக இருந்தார்.[24]

இயேசு அநேகமாக கலிலேயாக் கடலுக்குச் செல்லும் போதும் மற்றும் அங்கிருந்து திரும்பி வரும் வழியிலும் மத்தேயுவின் [வரிவசூலிக்கும்] அலுவலகத்தைக் கடந்து சென்றிருப்பார். அந்த ஆயக்காரர் தமது

*அலுவலகத்தில் அமர்ந்திருக்கையில் கிறிஸ்து போதித்ததைக் கேட்கப் பல வாய்ப்புக்களைப் பெற்றிருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.[25] ஆயினும் இந்த நாள் மிகவும் மாறுபட்டதாக இருந்தது, ஏனெனில் இயேசு அங்கு நின்று அவரிடத்தில், "எனக்குப் பின்சென்று வா!" (மாற். 2:14) என்று கூறினார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு விடுவிக்கப்பட்ட அழைப்பைப் போல் இதுவும் முழு நேர சீஷத்துவத்திற்கான அழைப்பாகவே இருந்தது. அந்த மீனவர்களைப் போலவே மத்தேயுவும் "எல்லாவற்றையும் விட்டு, எழுந்து அவருக்குப் பின்சென்றார்" (லூக். 5:28).[26]*

## *முடிவுரை*

*மாபெரும் கலிலேய ஊழியமானது சூடுபிடிக்க ஆரம்பித்தது. நமது அடுத்த பாடத்தில் நாம் இந்த ஊழியத்தைப் பற்றிய படிப்பைத் தொடருவோம். நாம், இயேசுவுக்கும் மார்க்கத் தலைவர்களுக்கும் இடையில் விவாதம் வலுப்பெற்று, கடைசியில் கிறிஸ்துவின் மரணத்தை விளைவிக்கும் வெறுப்புணர்வு கட்டியெழுப்பப்படுவதைக் காண்போம்.*

*இந்தப் பாடம் இயேசுவின் அதிகாரத்தை வலியுறுத்தியுள்ளது. அதிகாரம் பற்றிய கேள்வியானது, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை யூத அதிகாரிகளுடன் அவரது மோதலில் ஒரு பிரதானமான விஷயமாக இருந்தது. அவர் முதன்முறை காசுக்காரர் களை தேவாலயத்தில் இருந்து துரத்திவிட்டபோது அவர் ''இந்தச் செயல்களைச் செய்வதற்கான அதிகாரம்" (யோவா. 2:18) பற்றி அவர்கள் அவரிடத்தில் கேள்வி எழுப்பினார்கள். இந்த பூமியில் அவரது வாழ்வின் கடைசி வாரத்தின்போது, அவர்கள் ''நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? அதை எங்களுக்குச் சொல்லும்" (லூக். 20:2) என்று அறைகூவல் விடுத்தனர்.*

*அதிகாரம் பற்றிய கேள்வியானது அவருக்கு உங்கள் பதில்செயலிலும் மையமானதாக உள்ளது. அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு அவர், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18) என்று கூறினார். உங்கள் வாழ்வின் மீது அவருக்குள்ள அதிகாரத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர் களா? அவருடைய அதிகாரத்திற்குப் பணிதல் என்பதில் உதடுகளினால் ஆராதித்தல் என்பதை விட அதிகமானவை உள்ளடங்கியிருக்கின்றன; இது அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது. இயேசு, ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்று கூறினார். நீங்கள் அவரது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாயிருக்கின்றீர்களா - அதுவும் இன்றே?[27]*

குறிப்புகள்

[1]KJVயில் "power" என்றுள்ளது, ஆனால் KJVயில் மாற்கு 1:22, 27ல் "authority" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை இதே வார்த்தையாக உள்ளது. [2]ஜெப ஆலயத்திற்குப் பொறுப்பாளராக இருக்கும் மனிதர் ''அதிகாரி'' என்று அழைக்கப்பட்டார் (மாற். 5:36, 38; லூக். 8:41; 13:14) KJV வேதாகமம் "ruler of the synagogue" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. [3]முதல் நூற்றாண்டில் இருந்த ஒரு ஜெப ஆலயத்தின் அஸ்திபாரத்தினுடைய சிதிலங்களை இன்றைக்கும் கப்பர்நகூமில் காண முடியும். [4]நமது பாடம் தொடருகையில், இயேசு, "..... என்று கூறப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் ... [ஆனால்] நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." (மத். 5:27, 28) என்று அறிவிப்பதை நாம் கேட்போம். [5]"Of Nazareth" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மூல வசனப் பிரதியில், "Nazarene" என்றே உள்ளது. [6]''பரிசுத்தர்'' என்பது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் பட்டப் பெயர்களில் ஒன்றாக இருந்தது (சங். 16:10; அப். 2:27). [7]*Daimonion* என்பதன் பன்மை வடிவத்தை KJV வேதாகமம் "devils" என்று மொழிபெயர்க்கிறது, ஒரே ஒரு பிசாசான (*diabolos* என்ற) சாத்தான் மட்டுமே இருப்பதால் இது குழப்பமூட்டுவதாக உள்ளது. [8]மத்தேயு 12:22-29ல் சாத்தான் "அசுத்த ஆவிகளின் தலைவன்" என்று குறிப்பிடப்படுகிறான். [9]இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் நாம் இந்த வித்தியாசத்தைக் காண்போம். சுவிசேஷ விவரங்களின் மற்ற எழுத்தாளர்கள் இதே வித்தியாசத்தை ஏற்படுத்தி யுள்ளார்கள். J. W. மெக்கார்வி அவர்கள், "பிசாசு பிடித்தல் என்பதை வன்முறை யெதுவும் செய்யாத வியாதி என்று கருதுதல், பிசாசைத் துரத்தும் நிகழ்ச்சி ஒவ்வொன்றின் கண்ணோக்கிலும் காணும்போது சாத்தியம் அற்றதாகவே உள்ளது" என்று எழுதினார் (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 167). [10]உள்ளூர் மத அதிகாரிகள் இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதை விமர்சிக்க வில்லை என்பதைக் கவனியுங்கள். இந்த விமர்சனம் எருசலேமில் இருந்து வரும் பிரதிநிதிகளிடத்தில் இருந்து தோன்றும்.

[11]மத்தேயுவும் லூக்காவும், இதை சீமோன் பேதுருவின் வீடு என்று மட்டும் குறிப்பிடுகின்றார்கள் (மத். 8:14; லூக். 4:38 ஆகியவற்றைக் காணவும்). இதற்கு முன்பு பெத்சாயிதா ஊரானது "அந்திரேயா மற்றும் பேதுரு ஆகியோரின் ஊர்" என்று அழைக்கப்பட்டிருந்ததைக் கவனியுங்கள் (யோவா. 1:44). ஒன்று அவர்கள் கப்பர்நகூமுக்கு [தங்கியிருக்கும்படி] வந்திருக்க வேண்டும் அல்லது பெத்சாயிதா என்ற இடமானது கப்பர்நகூமின் புறநகர்ப் பகுதி என்று நினைக்கப்படுவதற்குப் போதுமான அளவு அண்மையில் இருந்திருக்க வேண்டும். [12]பேதுருவை "முதல் போப்" என்று குறிப்பிடுகிற மனித உபதேசத்திற்கு நேர்மாறான வகையில் அவர் அநேக ஆண்டுகளுக்கு முன் திருமணம் முடித்தவராகவே இருந்தார் (1 கொரி. 9:5). [13]ஓய்வுநாளானது சூரியன் மறைவின்போது முடிவடைந்ததாலும், ஓய்வு நாளன்று ஒரு சுமை சுமத்தல் தடை செய்யப்பட்டு இருந்ததை மீற விரும்பாத தாலும், மக்கள் சூரியன் மறையும் வரையிலும் காத்து இருந்திருக்கலாம் (எரே. 17:22ஐக் காணவும்). [14]எடுத்துக்காட்டாகப் பின்வரும் காரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) அவர் கிறிஸ்து என்று அறிவித்தல் அந்த வேளையில் மிகவும் விரைவானதாக இருந்தது மற்றும், (2) அவர் யார் என்பதற்கு பொல்லாங்கின் சக்திகள் பிரதான சாட்சியாக இருத்தல் என்பது மிகவும் ஏற்பில்லாததாக இருந்தது. [15]இந்தப் பெயரானது "பெயல்செபூப்" என்பது உட்படப் பிற வழிமுறைகளிலும் உச்சரிக்கப்பட்டுள்ளது. [16]லூக்கா 4:44ல், "அந்தப்படியே கலிலேயா நாட்டிலுள்ள ஜெப ஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தார்" என்று கூறப்படுகிறது. இந்த வசனத்தில், "யூதேயா" என்பது யூதேயா மாகாணத்தையல்ல ஆனால் பலஸ்தீன நாடு முழுவதை

*யும் குறிப்பிட்டது என்பது திட்டவட்டமானதாக உள்ளது. எனது வேதாகமத்தின் பக்கக் குறிப்பொன்று, "யூதேயா" என்பது "(கலிலேயர்கள் உட்பட) யூதர்களின் நாடு என்பதாகும் என்று விளக்குகிறது; சில கையெழுத்துப் பிரதிகளில் கலிலேயா என்றுள்ளது என்பதாக விளக்கப்படுத்துகிறது.'' [17]சீரியா நாடு கலிலேயாவுக்கு வடக்கில் இருந்தது. ("இந்தப் புத்தகத்தில் கூறி முடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற துணைப்பாடக் குறிப்பில் உள்ள வரைபடத்தில் காணவும்.) பயணிகள் கலிலேயாவில் இருந்து சீரியாவுக்குச் செய்தியை எடுத்துச் சென்றார்கள் என்பது தெளிவு. [18]மத்தேயு, ''வியாதிகள்'' மற்றும் ''அசுத்த ஆவி பிடித்தல்'' ஆகியவற்றிற்கிடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதைக் கவனியுங்கள். [19]சில அறிகுறிகள், இன்றைய நாட்களில் தொழுநோய் என்று பொதுவாக அழைக்கப்படுவதின் அறிகுறிகளுடன் பொருந்தி வருவதில்லை* ("Hansen's disease"). *(வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் வீடுகளுக்குக் கூடத் "தொழுநோய்" ஏற்படக் கூடியதாயிருந்தது; லேவியராகமம் 14:34, 35 வசனங்களைக் காணவும்). வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் தொழுநோய் என்று அழைக்கப்பட்ட இரு முக்கியமான வியாதிகள் பற்றி கலந்துரையாடல் ஒன்று* McGarvey and Pendleton *எழுதிய புத்தகத்தில் பக்கங்கள் 176-78ல் உள்ளது. [20]தொழுநோயாளிகளின் சுத்திகரிப்புக்கு சட்டங்கள் இருந்தன என்ற உண்மையானது, "தொழுநோயின்" எல்லா வகைகளும் குணமாக்க முடியாதவை களாக இருந்ததில்லை என்று கருத்துத் தெரிவிக்கிறது - ஆனால் பொதுவாகப் பேசுகையில், தொழுநோயானது குணப்படுத்த முடியாதது என்ற கருதப்பட்டது என்று நாம் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.*

[21]*கிரேக்க வசனத்தில் "தொழுநோயால் நிறைந்து" என்றுள்ளது (*KJV *மற்றும் தமிழில் காணவும்). [22]மூலமொழியில் இந்தச் சொற்றொடரானது "வரிவசூலிக்கும் மனிதர்'' என்று அர்த்தப்படுகிறது.* NASB *வேதாகமம்* "tax collector" *என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது.* KJV*யில்* "publican" *என்றுள்ளது, இது* "pub" *(அதாவது மதுபானங்கள் விற்குமிடம்) ஒன்றை நடத்தும் மனிதரைக் குறிக்க* "publican" *என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் சில நாடுகளில் குழப்பமூட்டுவதாக இருக்கக்கூடும். [23]கப்பர்நகூம் என்ற ஊரானது பலஸ்தீனத்தைக் கடந்து சென்ற முக்கியமான கிழக்கு-மேற்கு நெடுஞ்சாலையிலிருந்து தூரத்தில் இல்லை என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம். [24]*Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 55. [25]*இயேசுவுக்கும் மத்தேயுவுக்கும் இடையில் உள்ள உறவுமுறை பற்றிய பின்னணி விவரம் நமக்குத் தரப்படவில்லை, ஆனால் முழு நேரச் சீஷத்துவத்திற்கான உறுதிப்பாடு என்பது அறிவிக்கப்பட்ட முடிவாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். [26]மத்தேயுவின் முடிவு அவருக்கு ஒரு விலைமதிப்புள்ளதான, சிலவற்றை விட்டுவிட வேண்டியதாக இருந்தது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தங்கள் வலைகளை விட்டுவிட்டு வந்த மீனவர்கள் மீண்டும் மீன் பிடிக்கத் திரும்ப முடிந்தது (யோவா. 21:3ஐக் காணவும்); ஆனால் மத்தேயு தமது ரோம "வேலைக்கமர்த்து பவர்களை" விட்டுப் பின்திரும்பிய பின்பு, அவர் வரிவசூலிப்பவர் என்ற தமது பணிக்கு மீண்டும் திரும்ப முடியாதிருந்தது. பல இசைவுகள் மத்தேயுவின் அழைப்பைத் தொடர்ந்து அவர் வைத்த விருந்தைப் பற்றிய தகவல்களை வைக்கின்றன (மத். 9:10-13; மாற். 2:15-17; லூக். 5:29-32), மற்றும் அது இங்கு நன்கு பொருந்துகிறது. படிப்பின் இந்த இடத்தில் நீங்கள் அதை உள்ளடக்க விரும்பலாம். [27]இது ஒரு பிரசங்கமாக இல்லாத போதிலும், இதனை நீங்கள் விலகிப் போயுள்ள பாவிகளுக்கும் (ஒருக்காலும் கிறிஸ்துவுக்குள் இராதவர்கள்), அவிசுவாசி களான கிறிஸ்தவர்களுக்கும் இரட்சிப்பின் நிபந்தனைகளை இந்தப் பாடத்தில் உள்ளடக்க விரும்பலாம், இப்புத்தகத்தில் உள்ள*

*‘‘தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்’’ என்ற பிரசங்கமும் “சீஷத்துவத்திற்கான அழைப்பு” என்ற பிரசங்கமும், கிறிஸ்தவராவது எப்படி என்பதை வலியுறுத்துகின்றன. அவிசுவாசியான கிறிஸ்தவர் எப்படி மீளக்கட்டப்பட முடியும் என்பதற்கான வசனப்பகுதிகளில் அப். 8:22ம் யாக். 5:16ம் உள்ளடங்கியிருக்கின்றன.*